**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 32/2015**

Deposition of **<u>D.W.-3</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi,Gr. III Bench clerk of this court, on 06.03.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : செந்தில்குமார் | Father Name | : முத்துசாமி |
| Village | : கவுண்டம்பாளையம் | Taluk | : கெங்கவல்லி |
| Calling | : | Age | : 46 |

துவக்க நேரம் : 04.06 P.M

சாட்சி முன்னிலையானார், உறுதிமொழி செய்துவைக்கப்பட்டார்.

<u>பிரதிவாதிகள் தரப்பு முதல் விசாரணை</u>: நான் இவ்வழக்கிற்கு மூன்றாம் தரப்பினர். பிரதிவாதிகள் தரப்பு 3-ஆம் சாட்சி. இவ்வழக்கின் வாதிகள் மற்றும் பிரதிவாதிகளை தெரியும். நான் பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியம் அளிக்கின்றேன். நான் எனது முதல் விசாரணைக்கான சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் யாவும் நான் சொல்லியவை தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் உண்மைதான்.

**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. வாதிகள் நிலத்திற்கு தென்புறத்தில் ஒரு வண்டிப்பாதை செல்கிறது என்றால் சரிதான்.

இந்த தடம் ராமசாமி எங்களுக்கு எழுதிக்கொடுத்தார். இந்த தடத்தின் வழியாகத்தான் மேற்கில் உள்ள எங்கள் நிலங்களுக்குசென்று வருகிறோம். ராமசாமி என்பவர் இந்த தடத்தை எங்களுக்கு எழுதிக்கொடுத்ததாக எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

2. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10-ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். தமிழ் நன்றாக படிப்பேன். படித்துப்பார்த்துதான் கையொப்பம் செய்தேன். மேற்படி நிரூபண வாக்குமூலத்தில் பத்தி எண்.3-ல் '**மேற்படி 2 கிரய பத்திரத்தில் செக்குபந்தியில் தென்வடலாக செல்லும் பாதையைதான் ஓடைக்கும் மேற்கு என்று குறிப்பிட்டு கிரயம் செய்து கொடுத்துள்ளார்கள்**' என்று நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த ஓடையின் ச.எண். எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

3. தாவா சொத்தின் ச.எண். என்ன என்றால் ச.எண்.177/2 ஆகும். இதன் விஸ்தீரனம் எவ்வளவு என்றால் எனக்கு தெரியாது. வாதிகள் நிலத்தின் வடபுறத்தில் எங்கள் நிலத்திற்கு செல்வதற்கு ஒரு தடம் செல்கிறது என்றால் இல்லை. வாதிகளின் கிரய பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்ததில்லை.

4. இந்த வழக்கின் சங்கதிகள் பற்றி எனக்கு முழுமையாக தெரியுமா என்றால் தெரியும். வாதி வழக்கு சொத்தை யாரிடமிருந்து கிரயம் பெற்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், கருப்பண்ண கவுண்டரிடம் வாங்கினார். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் கருப்பண்ண கவுண்டரிடம் வாங்கிய கிரய ஆவணமா என்றால் ஆமாம்.

5. என்னிடம் காட்டப்படும் கிரய ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளது. கருப்பண்ண கவுண்டர் ராமசாமி கவுண்டருக்கு கிரயம் கொடுத்தாக உள்ளது. இந்த ஆவணத்தில்ச.எண்.177/2-ல் மொத்த விஸ்தீரணம் ஏக்.3.89 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இருக்கலாம். வாதி எவ்வளவு நிலம் வாங்கினார் என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

6. வாதிகள் எவ்வளவு சொத்திற்கு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் சரியாக தெரியவில்லை. என்னை இந்த வழக்கில் சாட்சி சொல்ல யார் அழைத்து வந்தார்கள் என்றால் கந்தசாமி, நடராஜன் ஆகிய இருவரும் அழைத்து வந்தார்கள். மேற்படி இருவரும் 2, 5 -வது பிரதிவாதிகள் என்றால் சரிதான்.

7. தாவா சொத்திற்கு தெற்கிலேயே உள்ள வண்டித்தடத்திலேயே எனது வீட்டிற்கு பிரிந்து சென்றுவிடுவேன் என்றால் சரிதான். அதனால் எங்கள் வீட்டிற்கு செல்வதற்கு வாதிகளின் நிலத்தை தாண்டி செல்ல வேண்டிய அவசியமில்லை என்றால் சரிதான். நான் பிரதிவாதிகளின் கூட்டாளி என்பதால் அவர்கள் சொல்லிக்கொடுத்ததுபோல் இந்த வழக்கில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8. நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தையும் ஏற்கனவே தயார் செய்து வைத்திருந்தார்களா என்றால் இல்லை, நான்தான் சொன்னேன். வழக்கு சங்கதிகள் எதுவும் எனக்கு தெரியாது என்றாலும், பிரதிவாதிகள் அழைத்து வந்ததால் அவர்களுக்கு சாதகமாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.32/2015, Dt.06.03.2025.

வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடிக்கப்பட்டுவிட்டது.

முடிவு நேரம்: 04.30 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

sd/-S.Munusamy
Additional District Munsif(F.A.C), Attur

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.32/2015, Dt.06.03.2025.